**பெருநகர சென்னை மாநகராட்சி**

**தேர்தல் செய்தி வெளியீடு**

**தே.செ.வெ.எண். 55** **நாள்: 18.04.2024**

**சென்னை நந்தனம் அரசு ஆண்கள் கலைக்கல்லூரி பாதுகாப்பு அறையிலிருந்து வாக்குப்பதிவிற்கு தேவையான பொருட்களை அந்தந்த வாக்குச்சாவடி மையங்களுக்கு பிரித்தனுப்பும் பணியினை மாவட்ட தேர்தல் அலுவலர்/கூடுதல் தலைமைச் செயலாளர்/ஆணையாளர் டாக்டர் ஜெ. ராதாகிருஷ்ணன், இ.ஆ.ப., அவர்கள் இன்று பார்வையிட்டு ஆய்வு மேற்கொண்டார்.**

சென்னை மாவட்டத்திற்குட்பட்ட 3 நாடாளுமன்றத் தொகுதிகளிலும் நாடாளுமன்ற பொதுத்தேர்தல் நாளை (19.04.2024) நடைபெறவுள்ளதைத் தொடர்ந்து, சைதாப்பேட்டை சட்டமன்றத் தொகுதி, நந்தனம் அரசு ஆண்கள் கலைக்கல்லூரி பாதுகாப்பு அறையிலிருந்து வாக்குப்பதிவிற்குத் தேவையான பொருட்களை அந்தந்த வாக்குச்சாவடி மையங்களுக்கு பிரித்தனுப்பும் பணியினை மாவட்ட தேர்தல் அலுவலர்/கூடுதல் தலைமைச் செயலாளர்/ஆணையாளர் டாக்டர் ஜெ. ராதாகிருஷ்ணன், இ.ஆ.ப., அவர்கள் இன்று (18.04.2024) பார்வையிட்டு ஆய்வு மேற்கொண்டார்.

**இதனைத் தொடர்ந்து, செய்தியாளர்கள் சந்திப்பில் மாவட்ட தேர்தல் அலுவலர்/கூடுதல் தலைமைச் செயலாளர்/ஆணையாளர் பேசும்போது தெரிவித்ததாவது:**

இந்திய தேர்தல் ஆணையத்தின் உத்தரவின்படி, நாளை (19.04.2024) நடைபெறவுள்ள நாடாளுமன்ற பொதுத் தேர்தல் 2024னை முன்னிட்டு, சென்னை மாவட்டத்திற்குட்பட்ட 3 நாடாளுமன்றத் தொகுதிகளிலும் அனைத்து முன்னேற்பாட்டுப் பணிகளும் தீவிரமாக மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

சென்னை மாவட்டத்திற்குட்பட்ட 16 சட்டமன்றத் தொகுதிகளில் உள்ள பாதுகாப்பு அறைகளிலிருந்து வாக்குப்பதிவிற்குநத் தேவையான மின்னணு வாக்குப்பதிவு இயந்திரங்கள், கட்டுப்பாட்டுக் கருவிகள், VVPAT உள்ளிட்ட இதரப் பொருட்கள் மற்றும் பல்வேறு படிவங்கள் அந்தந்த வாக்குச்சாவடி மையங்களுக்கு 299 செக்டார் மேஜிஸ்ரேட் மூலமாக முழு காவல்துறை பாதுகாப்புடன் அனுப்பும் பணி நடைபெற்று வருகிறது.

தேர்தல் பொது பார்வையாளர்கள் முன்னிலையில் வாக்குச்சாவடி அலுவலர்கள் வாக்குச்சாவடிகள் வாரியாக கணினி குலுக்கல் முறையில் நேற்று (17.04.2024) தேர்ந்தெடுக்கப்பட்டனர். இவர்களுக்கான பணி ஆணைகள் இன்று (18.04.2024) காலை நடைபெற்ற பயிற்சி வகுப்புகளில் வழங்கப்பட்டு அவர்கள் சம்பந்தப்பட்ட வாக்குச்சாவடி மையங்களுக்குச் சென்றுள்ளனர். வாக்குச்சாவடி அலுவலர்களிடம் செக்டார் மேஜிஸ்ரேட் பணியாளர்கள் வாக்குப்பதிவிற்குத் தேவையான பொருட்களை ஒப்படைப்பார்கள். ஒரு செக்டார் மேஜிஸ்ரேட்க்கு 10 முதல் 12 வாக்குச்சாவடி மையங்கள் வரும்.

752 பதற்றமான வாக்குச்சாவடி மையங்கள், 23 மிகவும் பதற்றமான வாக்குச்சாவடிகள் உள்பட 65 விழுக்காடு வாக்குச்சாவடி மையங்களில் கண்காணிப்பு கேமராக்கள் பொருத்தும் பணிகள் முடிவடைந்து, ரிப்பன் கட்டட வளாகத்தில் தேர்தல் கட்டுப்பாட்டு மையத்தின் மூலம் தொடர்ந்து கண்காணிக்கப்படுகிறது.

வாக்குப்பதிவு அலுவலர்கள் அந்தந்த வாக்குச்சாவடி மையங்களில் நாளை (19.04.2024) காலை 5.30 மணி முதல் 7 மணிக்குள் மாதிரி வாக்குப்பதிவு நடத்தப்படும். இதனைத் தொடர்ந்து காலை 7 மணி முதல் மாலை 6 மணி வரை வாக்குப்பதிவு நடைபெறும். வாக்குப்பதிவு இயந்திரங்களில் பிரச்சினை ஏற்படும் பட்சத்தில் அதற்கு மாற்றாக 20% முன்னிருப்பு வாக்குப்பதிவு இயந்திரங்கள் தயார்நிலையில் வைக்கப்பட்டுள்ளன.

85 வயதிற்கு மேற்பட்ட முதியோர்கள், மாற்றுத்திறனாளிகள் மற்றும் உடல்நலக் குறைபாடு உடையவர்களுக்கு முன்னுரிமை அடிப்படையில் வாக்கு செலுத்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. வாக்குச்சாவடி மையங்களில் மாற்றுத்திறனாளிகள், முதியோர்கள் உள்ளிட்ட வாக்காளர்களுக்கு சாய்தள வசதிகள், பந்தல் அமைத்தல், குடிநீர் வசதி, மின் வசதி போன்ற அடிப்படை வசதிகள் செய்யப்பட்டுள்ளன. மேலும், வாக்குச்சாவடி மையங்களில் மருத்துவக் குழுக்களும் தயார்நிலையில் உள்ளனர். நாளை தேர்தல் நடைபெற சென்னை மாவட்டத்தின் சார்பில் அனைத்து முன்னேற்பாட்டுப் பணிகளும் சிறப்பாக மேற்கொள்ளப்பட்டுள்ளது. பொதுமக்கள் அனைவரும் தவறாமல் சென்று தங்கள் வாக்கினை செலுத்த கேட்டுக் கொள்ளப்படுகிறது.

சென்னை மாவட்டத்தில் வாக்காளர் தகவல் சீட்டுகள் 33.71 இலட்சம் வாக்காளர்களுக்கு அதாவது 86% வாக்காளர்களுக்கு வழங்கப்பட்டுள்ளது. வாக்காளர்கள் வாக்காளர் அடையாள அட்டை மற்றும் இந்திய தேர்தல் ஆணையத்தால் ஒப்புதல் அளிக்கப்பட்ட 12 அடையாள ஆவணங்களில் ஏதேனும் ஒன்றினை வாக்குச்சாவடி மையங்களில் உள்ள உதவி மையத்தில் காட்டினால் வாக்காளர் பட்டியலில் பெயர் இருந்தால் கண்டிப்பாக எந்த வாக்குச்சாவடி மையத்தில் வாக்கினை செலுத்தலாம் என வழிகாட்டுவார்கள்.

மாற்றுத்திறனாளி வாக்காளர்கள் தங்களது ஜனநாயகக் கடமையை நிறைவேற்றும் பொருட்டு, அவர்கள் வாக்குச்சாவடிக்குச் சென்று வாக்களிக்கும் வகையில் இலவச வாகன வசதிகள் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. இதற்காக UBER நிறுவனத்தின் சேவையைப் பயன்படுத்திக் கொள்ள வசதிகள் செய்யப்பட்டுள்ளது. பெருநகர சென்னை மாநகராட்சியின் இலவச வாகன சேவையைப் பயன்படுத்திக் கொள்ள விரும்பும் மாற்றுத்திறனாளிகள் Saksham App மூலமாகவும், மாவட்ட தகவல் மையத் தொடர்பு எண் 1950 அல்லது மாவட்ட தேர்தல் அலுவலக கட்டுபாட்டு அறை எண் 1800-425-7012 என்ற எண்ணை தொடர்பு கொள்ளலாம். மேலும், மாற்றுத்திறனாளி (Hearing Impaired) வாக்காளர்களின் உதவிக்காக ஒரு நாடாளுமன்றத் தொகுதிக்கு ஒருவர் என்ற வீதத்தில் சைகை மொழி தெரிந்த மூன்று அலுவலர்கள் மாவட்ட தேர்தல் அலுவலக கட்டுப்பாட்டு அறையில் பணிபுரிய நியமிக்கப்பட்டுள்ளார்கள். எனவே, மாற்றுத்திறனாளி (Hearing Impaired) வாக்காளர்கள் 91501 95275 என்ற வாட்ஸ்ஆப் எண்ணை தொடர்பு கொண்டு பயனடையலாம் எனத் தெரிவித்தார்.

இந்த ஆய்வின்போது, தேர்தல் நடத்தும் அலுவலர்/தெற்கு வட்டார துணை ஆணையாளர் திரு.எம்.பி.அமித், இ.ஆ.ப., மற்றும் உதவி தேர்தல் நடத்தும் அலுவலர் உள்ளிட்ட அலுவலர்கள் உடனிருந்தனர்.

**செய்தி வெளியீடு : இணை இயக்குநர் / மக்கள் தொடர்பு அலுவலர்,**

**பெருநகர சென்னை மாநகராட்சி**